(7 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 5400** **Sub. Code : WTLM 31**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2024

Third Semester

தமிழ் – முதன்மைபாடம்

சிற்றிலக்கியம்

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (15 × 1 = 15 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிற்றிலக்கியத்தைக் குறிக்க முதன்முதலில் வழங்கப்பட்ட சொல் எது?

(அ) அந்தாதி (ஆ) பிரபந்தம்

(இ) தூது (ஈ) பரணி

2. சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை எனப் பொதுவாக எவ்வளவு கூறப்படுகிறது?

(அ) 106 (ஆ) 150

(இ) 96 (ஈ) 87

3. பக்தி இலக்கியத்தில் உள்ள சிற்றிலக்கியம்

(அ) திருப்பாவை (ஆ) திருவந்தாதி

(இ) திருவாசகம் (ஈ) திருக்குறுந்தாண்டகம்

4. உடல் உறுப்புகளைப் புகழும் நோக்கில் இயற்றப் பெற்ற சிற்றிலக்கியம்

(அ) அந்தாதி

(ஆ) பாதாதி கேசம்

(இ) தூது

(ஈ) பரணி

5. தமிழ்மொழியில் தோன்றிய முதல் தூது நூல் எது?

(அ) தமிழ் விடு தூது (ஆ) கிள்ளை விடு தூது

(இ) பண விடு தூது (ஈ) நெஞ்சு விடு தூது

6. கலம்பக இலக்கிய வகையின் முதல் நூல் யாது?

(அ) நந்திக்கலம்பகம்

(ஆ) காசிக் கலம்பகம்

(இ) மதுரைக் கலம்பகம்

(ஈ) தில்லைக் கலம்பகம்

7. பிள்ளைத்தமிழ் நூல்களில் இடம்பெறும் பருவங்கள் எத்தனை?

(அ) 20 (ஆ) 40

(இ) 13 (ஈ) 10



*Nesamony Memorial Christian College, Marthandam*

8. தமிழ்விடு தூதில் எல்லாச் செல்வங்களிலும் உயர்ந்த செல்வமாக கூறப்படுவது

(அ) கல்வி (ஆ) பொருட் செல்வம்

(இ) தமிழ்மொழி (ஈ) காதல்

9. காவடிச் சிந்து நூலின் ஆசிரியர்

(அ) அண்ணாமலை ரெட்டியார்

(ஆ) திரிகூடராசப்ப கவிராயர்

(இ) சோமசுந்தர பாரதியார்

(ஈ) செயங்கொண்டார்

10. தமிழ் இலக்கியத்தில் தொகை நூல் வகையைச் சார்ந்தது

(அ) பிள்ளைத்தமிழ்

(ஆ) தூது

(இ) கலம்பகம்

(ஈ) முத்தொள்ளாயிரம்

11. தக்கயாகப் பரணியின் ஆசிரியர்

(அ) செயங்கொண்டார்

(ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) சீனிப்புலவர்

(ஈ) பெருமாள்



12. கவிதைக் கிரீடம் என்றழைக்கப்படும் நூல்

(அ) தமிழ் விடு தூது

(ஆ) பள்ளு

(இ) கலம்பகம்

(ஈ) குற்றால குறவஞ்சி

13. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூலின் காலம்

(அ) 15 - ஆம் நூற்றாண்டு

(ஆ) 16 - ஆம் நூற்றாண்டு

(இ) 17 - ஆம் நூற்றாண்டு

(ஈ) 18 - ஆம் நூற்றாண்டு

14. உழவுத் தொழிலின் மேன்மையைப் புலப்படுத்தும் சிற்றிலக்கியம்

(அ) பரணி (ஆ) தூது

(இ) குறவஞ்சி (ஈ) முக்கூடற்பள்ளு

15. முக்கூடற்பள்ளுவின் காலம்

(அ) சோழர் காலம்

(ஆ) நாயக்கர் காலம்

(இ) சேரர் காலம்

(ஈ) பாண்டியர் காலம்



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி ஆ — (5 × 4 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்கள் அளவில் விடையளிக்க.

16. (அ) கலம்பகம் - பெயர்க்காரணம் கூறுக.

(அல்லது)

(ஆ) தமிழ்விடு தூதில் தமிழ்மொழியின் 12 பருவங்களாக எவை எவை கூறப்படுகின்றன?

17. (அ) சிற்றிலக்கிய வகைகள் சிலவற்றைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியத்தின் வேறு பெயர்களைக் கூறுக.

18. (அ) தமிழ்விடு தூது நூலில் சோமசுந்தரக் கடவுளிடம் யார் எதற்காகத் தூது விடுவதாய் காட்டப்படுகிறது?

(அல்லது)

(ஆ) பரணி – குறிப்பு வரைக.

19. (அ) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூல் சிறப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) முக்கூடற்பள்ளு - நூல் அமைப்பைக் கூறுக.



20. (அ) மதுரைக்கலம்பகம் - பெயர்க்காரணம் கூறுக.

(அல்லது)

(ஆ) குறவஞ்சி என்ற பெயர் அந்த இலக்கியத்திற்கு ஏற்படக் காரணம் யாது?

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்குக் 600 சொற்கள் அளவில் விடையளிக்க.

21. (அ) முத்தொள்ளாயிரம் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியம் குறித்தும் வகைகளின் எண்ணிக்கைக் குறித்தும் தொகுத்துரைக்க.

22. (அ) குற்றாலக் குறவஞ்சியின் சிறப்புகளை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) மதுரைக்கலம்பகம் கூறும் மதுரை வரலாற்றைக் குறித்து கட்டுரை வரைக.

23. (அ) அபிராமி அந்தாதி நூற்பயனைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காவடிச் சிந்து நூல் குறித்து கட்டுரை வரைக.



Nesamony Memorial Christian College, Marthandam

24. (அ) பரணி இலக்கியங்களைப் பட்டியலிட்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கிய சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

25. (அ) தூது இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விரித்துரைக்க.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*